370

8 பக்கங்கள் | விலை 0—1—3

திராவிடர் வார வெளியீடு

உதயம்

ஆசிரியர் :—M. கந்தசாமி

மலர் 1 | திருவத்திபுரம் 4—8—46 வியஜ ஆடி மீ 20உ ஞாயிறு | இதழ் 1

புரட்சிக்கவி பாரதிதாசனுக்கு பணமுடிப்பு

50000 மக்கள் கூட்டம்

எல்லாக் கட்சிகளும் கலந்து கொண்டன

தமிழ்நாட்டுச் சரித்திரத்திலே கண்டிராத காட்சி

1946 ஜுலை 28ஆம் நாள் தமிழ் நாட்டுச் சரித்திரத்திலே மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும் என்பதில் சந்தேகமில்லை எனெனில் அன்று சென்னை பச்சையப்பன் கல்லூரி மைதானத்தில் கண்ட காட்சி அவ்வளவுதூரம் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கட்சியைச் சேர்ந்த மக்களும் ஆங்கு கூடியிருந்தனர். பலவித கருத்துக்களைக் கொண்ட மக்கள் குழுமி யிருந்தனர். எங்கு பார்த்தாலும் மக்கள் களிப்புடன் காணப் பட்டனர். திருவிழாவுக்கு வருகிறவர்கள் போல் பெண்டுபிள்ளைகளுடன் வந்திருந்தார்கள்.



300 பேர்களுக்குமேல் உட்காரக்கூடிய அவ்வளவு பெரிய மேடை போடப் பட்டிருந்தது. மின்சார விளக்குகளாலும் தோரணங்களாலும் மேடையும் மைதானமும் நன்கு அலங்கரிக்கப் பட்டிருந்தது. மக்கள் விசாலமாக உட்கார்ந்து பார்க்கவும் சொற்பொழிவுகளை கேட்கவும் ஆன முறையில் நல்லவிதமாக ஒலிபெருக்கிகள் அமைக்கப் பட்டிருந்தன. 1000 பெண்களுக்கு மேல் 50,000 மக்கள்கூடியிருந்தனர்.

இவ்வளவு பெரிய பந்தலும் அலங்காரமும் மக்கள் கூட்டமும் எதற்காக? தமிழ் நாட்டிலே தமிழ் மக்களின் உள்ளத்தைத் தட்டியெழுப்பி இரத்தத்தில் சூடு பிறக்கச்செய்து நரம்புகளுக்கு முறுக்கேறச் செய்து வீரத்துடன் எழச்செய்த நமது புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்களுக்கு தமிழ் மக்கள் அன்புடன் அளித்த அன்பை-பணமுடிப்பை அளிப்பதற்காகவும் அவரது உழைப்பைப் பாராட்டுவதற்காகவும் ஆகும்.

தமிழ் நாட்டுச் சரித்திரத்திலே ஒரு கவிக்கு இத்தகைய ஒரு அன்பளிப்பை மக்கள் அளித்ததாக எங்கும் காண முடியாது. புலவர்கள், கவிகள் என்பவர்கள் ஆதரிப்பார் அற்று வறுமையில் வாடி மடிந்திருக்கிறார்கள் என்பதைத் தான் காண முடியுமேயல்லாது இவ்வாறு மக்கள் ஆதரவு பெற்று வாழ்ந்ததாகக் காண முடியாது. எனவே இது புதுமையான சம்பவமும் என்றும் மறக்க முடியாத சம்பவமும் ஆகும். சரியாக 4-30 மணிக்கு குளிக்கரைபிச்சையப்பா அவர்கள்தம் கோஷ்டியாருடன் நாதஸ்வர விருந்தளித்தார். அடுத்தபடியாக இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் அவர்களின் தமிழிசையை மக்கள் கேட்டு இன்பத்தில் மூழ்கி யிருந்தார்கள். கவி பாரதிதாசன் அவர்களின் பாடல்களையே மக்கள் மனதை கொள்ளைகொள்ளும் விதத்தில் பாடினர் என்றால் மிகையாகாது.

6 மணிக்கு விழாவின் நோக்கத்தைத் தோழர் N. V. நடராசன் அவர்கள் விளக்கி, நாவலர் S. சோமசுந்தர பாரதியார் அவர்களைத்

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்

வேலை நிறுத்தம்

(காம்ரேட்)

விடிந்தெழுந்து பத்திரிகையை கையில் எடுத்தால் 'வேலை நிறுத்தம்' என்ற செய்திதான் கண்களில் முதலில் படுகிறது. எங்கு பார்த்தாலும் எப் பகுதிகளிலும் வேலை நிறுத்தம் இருந்து வருவதாகத் தெரிகிறது. காட்டுத்தீபோல் இது எங்கும் எல்லா நிலையங்களிலும் தொழிற் சாலைகளிலும் பரவி வருகிறது. இத் தீ பரவுவதற்கு காற்றும் தகுந்தாற்போல் வீசுகிறது. இத்தீயை யணைக்கப் படைகள் இல்லையா என்று கேட்கலாம், படைகள் உண்டு. ஆனால் இயந்திரம் அவர்களிடமில்லை.

எப்படியெனில் வெறும் படைகளை மட்டும் வைத்துக் கொண்டு இன்று எந்த நாடும் போரை நடத்த முடியுமா? அந்தந்த படைகளுக்கு வேண்டிய இயந்திர சாதனங்கள் வேண்டும். இவை இல்லாமல் எவரும் எந்த விதமான போரையும் நடத்த முடியாது. அதுபோலவே இவ்வேலை நிறுத்தத் தீயை பரவவிடாமல் தடுப்பதற்கு நிர்வாக இயந்திரம் மாற்றியமைக்கப்படவேண்டும் இல்லை, இயந்திரம் புதியதாகவே நிறுவப்படவேண்டும். அப்பொழுது தான் மக்கள் ஆபத்திலிருந்து தப்ப முடியும். இன்றுள்ள நிர்வாக அமைப்பு முறைப்படி இதைச்செய்ய முடியாது. இந்நிர்வாக அமைப்பு மாற்றியமைக்கும்வரை இத்தகைய வேலை நிறுத்தங்கள் தோன்றித்தான் தீரும். மக்களுக்கு தொல்லைகள் ஏற்பட்டுக் கொண்டுதான் வரும்.

இத்தகைய வேலை நிறுத்தங்கள் ஏன் ஏற்படுகின்றன? இதற்கு என்ன காரணம்? இதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா? என்பவற்றை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்று மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டது. வாழ்க்கைத் தரம் உயரவே தேவை அதிகரிக்கலாயிற்று. தேவைக்கான வருவாய் வேண்டும். இன்றுள்ள வருவாய் தேவைக்கானதாக யில்லை. எனவே வேலை நிறுத்தங்கள் நடைபெற்று வருகின்றன. இதை எவ்வாறு அநியாயமென்று சொல்லுவது?

எனவே, இன்றுள்ள நிர்வாக அமைப்பு முறைப்படி வேலைநிறுத்தக் காரர்கள் கோரும்கோரிக்கையை நிறைவேற்றி வைக்க முடியாது. ஏன்? மனம் வராது. புதியதோர் நிற்வாக யமைப்பு ஏற்பட்டால்தான் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதற்கான மனம் வரும்.

ஆகவே, இன்று வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் யாவரும் ஒத்துழைத்து புதிய நிர்வாக இயந்திரத்தை நிறுவுவதற்கான முயற்சியில் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும். இக்காரியம் அவ்வளவு எளிதில், அவ்வளவு விரைவில்செய்து முடித்துவிடலாம் என்று எவரும் எண்ணிவிடமுடியாது. இவர்களுக்குள் எவ்வளவு தூரம் கட்டுப்பாடும் [illegible] ஏற்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு தான் இவர்களது எண்ணம் நிறைவேறும்.

இன்றுள்ளவர்களிடமிருந்து ஏதாவது பரிகாரம் கிடைக்கும் என்று எவராவது நம்பினால் அது தற்கொலையாகவே முடியும். ஏனெனில் இவர்களது தேவைக்கு ஏதோ ஓரளவுக்கு உதவ முன்வருவதென்றாலும் அதுவும் மற்றவர்களின் அதாவது இவர்களைவிட கஷ்டப்படுகிற மக்களின் மடியில் கையை வைத்துதான் செய்யப்படும். உதாரணமாக மில் தொழிலாளர்களுக்கு சில சௌகரியம் செய்துகொடுப்பதற்காக அதாவது கூலியில் சிறிது உயர்த்துவதற்காக மில்லில் உற்பத்தியாகும் ஜவுளிகளின் விலையை உயர்த்தி விட்டிருப்பதை எண்ணிப்பார்த்தால் நாம் சொல்வதின் கருத்து என்ன என்பது விளங்கும். இவ்விலை உயர்வு பாமர மக்களை சாதாரண மக்களை எவ்வளவுதூரம் பாதிக்கும்? அவர்களின் வெறுப்பு தொழிலாளர்கள்மீது எவ்வளவுதூரம் பாயும்என்பதை எண்ணிப்பார்த்தால் இது தற்கொலைக்கு ஒப்பான காரியமாகாதா என்பது விளங்கும் வாங்குவோர் எல்லோரும் குறிப்பாக 100-க்கு 90 பேர் பாமர மக்கள், எளியவர்கள். இவர்களிடமிருந்து பறித்து தொழிலாளர்களுக்குக் கொடுக்கிறார்கள். இதுவா தொழிலாளர் உலகம் இன்று கேட்பது? உற்பத்தியாளர்கள் அடிக்கும் கொள்ளை லாபத்தில் ஒரு பகுதியை தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கோருகிறார்கள். இந்தக் கோரிக்கை மறுக்கப்படுகிறது இன்றைய முதலாளிகளாலும் அவர்களுக்காக அவர்களால் நடத்தப்படும் சர்க்காராலும்.

எனவே தொழிலாளர்களும்-பாட்டாளிகளும் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற வேண்டுமானால் தங்களின் தேவை நிறைவேறவேண்டுமானால் நிர்வாகஇயந்திரத்தைமாற்றியமைக்க முயலவேண்டும். அவ்வாறு மாற்றியமைத்தால் தான் வேலை நிறுத்தத் தீ நாடெங்கும் பரவாமல் தடுக்க முடியும்.

வேலை நிறுத்தக் காரர்கள் தங்கள் கோரிக்கையை சர்க்காருக்கும் தொழில் முதலாளிகளுக்கும் எடுத்துக் கூறினால் மட்டும் போதாது. பொது மக்களுக்கு நன்கு எடுத்து விளக்க வேண்டும். நாடெங்கும் சுற்றிப் பொதுக் கூட்டங்கள் கூட்டி தங்கள் கோரிக்கையின் நியாயத்தை எடுத்துக் காட்டவேண்டும். பொது மக்களின் ஆதரவைத் திரட்டவேண்டும். பொது மக்கள் அனுதாபமும் அன்பும் இவர்களுக்கு எவ்வளவு தூரம் கிடைக்கிறதோ அதைப் பொறுத்துதான் சர்க்காரும் முதலாளிகளும் இணங்கி வருவார்கள்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் இதை கவனத்தில் வைத்து நடப்பார்களாக.

★ ★ ★

நேயர்களுக்கு அறிவிப்பு

சென்ற மாதம் 20ஆம் நாள் உதயம் வெளிவருவதாக அறிவித்திருந்தோம். எதிர்பாராத சில அசந்தர்ப்பங்களால் குறித்த நாளில் வெளியிட முடியாமல் போய் விட்டது. அதனால் இத்தாமதத்திற்கு நேயர்கள் பொறுத்தருளவேண்டுமென வேண்டிக்கொள்கிறோம்.

மற்றும் 'உதயம்' இப்பொழுது வெளிவரும் அளவைவிட பெரிய அளவில் வெளிவரும். இப்பொழுது இதைவிட பெரிய அளவு 'கிரவுன்' அளவு காகிதம் கிடைக்காததால் இந்த அளவில் வெளியிடுகிறோம், விரைவில் பெரிய அளவில் வெளிவரும். அப்பொழுது இன்று காணப்படுவதைவிட அதிகமான கட்டுரைகளையும், செய்திகளையும், கதைகளையும் கண்டு களிப்படைவீர்கள்.

அதனால் உங்கள் ஆதரவும்ஒத்துழைப்பும் இன்று போல் என்றும் இருந்துவரக் கோருகிறோம்.

செய்திகள் கட்டுரைகள், கதைகள் எழுதியனுப்பும் தோழர்கள் கூடுமானவரை தெளிவாகவும் ஒரு பக்கத்திலும் எழுதியனுப்பக் கோருகிறோம். வெளியிடப்படாத கட்டுரைகளை திருப்பியனுப்ப வேண்டுமென விரும்பும் தோழர்கள் தபால் தலைகளை வைத்து அனுப்பவேண்டும்.

'உதயம்' வெளிவருவதற்கு முன்னதாகவே வாழ்த்துக்கள் நூற்றுக்கணக்கில் வந்து குவிகின்றன. இவைகளையெல்லாம் வெளியிடுவதற்கில்லை மன்னிக்கவும். திராவிட மக்களின் ஆதரவையும் அன்பையும் தாராளமாக அளிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

ஆசிரியர்.

பஞ்சமும் பஞ்சப்படியும்

நாட்டில் இன்று எங்கும் பஞ்சம்! 'பஞ்சப்படி!' என்ற குரல்தான் கேட்கப்படுகிறது. நாளுக்கு நாள் இக்குரல் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இது ஓய்வதாகக் காணோம்.

இதற்கு என்ன காரணம்? மக்களின் தேவைக்கான பொருட்களின் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே வருகிறது. யுத்தம் துடங்குவதற்கு முன் இருந்த விலையையும் இன்றுள்ள விலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இப்பஞ்சத்தின் காரணமும், பஞ்சப்படி கேட்பதின் காரணமும் தெரியவரும்.

பாழாய்ப் போகிற யுத்தம் ஆரம்பித்ததும் போதும் இந்நாட்டில் கண்ணை மூடிக்கொண்டு இந்நாட்டுச் சர்க்கார் பணப் பெருக்கத்தை யுண்டு பண்ணி விட்டார்கள். பணம் பெருகவே பொருட்களின் விலையை எத்தகைய சம்பந்தாசம்பந்தமுமில்லாமல் ஏற்றி விட்டார்கள். நாட்டு மக்களின் வாங்கும் சக்தியைக் குறித்து கவலையில்லாமல் பொருட்களின் விலையையுயர்த்தி விட்டார்கள். இதனால் மக்கள் படும் கஷ்டம் சொல்ல முடியாது. அதிலும் நடுத்தர மக்களின் தொழிலாள மக்களின் நிலைமிகக்கஷ்டமாய் விட்டது. இப்பொழுது சர்க்கார்பணப்பெருக்கத்தைக் குறைத்து விட்டார்கள். அதாவது யுத்தத்தின் காரணமாக வெளியிட்ட பணத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார்கள். என்றாலும் பொருட்களின் விலையோ இறங்கவில்லை. பணப் புழக்கம் குறைந்து விட்டதென்றாலும், விலைவாசி இறங்வில்லை. இன்னும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதனால் பஞ்சப்படி உயர்த்த வேண்டுமென்று கேட்கின்றனர்; சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கிளர்ச்சி செய்கின்றனர். இதில் என்ன தப்பு இருக்க முடியும்? இது எவ்வாறு அநியாயமாகும்? யுத்தத்திற்கு முன்னிருந்த விலையை விட, இன்று மக்களுக்கு மிகமிக அவசியமான உயிர் வாழ்வதற்குத்தேவையான பொருட்களின் விலை ஒன்றுக்கு 5 மடங்கு 6 மடங்கு அதிகரித்திருக்கிறது. இது சர்க்காருக்கோ, முதலாளிகளுக்கோ தெரியாதிருக்கமுடியாது. விலைவாசியின் உயர்வுக்கும் இன்று சர்க்காரும் தொழில் நிலையங்களும் கொடுக்கும் பஞ்சப்படிக்கும் நேரான சம்பந்தமிருக்கிறதா? யுத்தத்திற்கு முன் ரூ. 30 சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த ஒருவருக்கு ரூ. 16 பஞ்சப்படி கொடுக்கிறார்கள் சர்க்காரார். விலைவாசி ஒன்றுக்கு 5 மடங்கு 6மடங்காக உயர்ந்திருக்கிறது. ஆனால் இவருக்குக் கொடுக்கப்படும் பஞ்சப்படி ½ பங்கு ஆக இருக்கிறது. இந்த நிலையில் எவ்வளவுகாலத்திற்குத்தான் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாய் பொத்திக்கொண்டிருக்க முடியும்? வாயும் கையும் சும்மா யிருந்தாலும், அடக்குமுறைக்குப்பயந்து பேசாது இருந்தாலும், வயிறு சும்மா இருக்குமா? பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும் என்று, அறியாமலா சொல்லி வைத்தார்கள்? பசி தாங்கமாட்டாமல் இன்று இக் கூக்குரல் வானைப் பிளக்கிறது.

இதற்கு என்ன செய்வது? ஒன்று பஞ்சப்படியை-கூலியை அந்த விகிதப்படி உயர்த்த வேண்டும்; அல்லது விலைவாசியைச் சர்க்கார் கொடுக்கிற பஞ்சப்படியின் விகிதாச்சாரத்திற்குத் தகுந்தாற்போல் குறைக்க வேண்டும். இவைகளில் எதையாவது ஒன்றைச் சர்க்கார் மேற்கொள்ளாத வரை இக் கூக்குரல் ஓயாது, கிளர்ச்சியும் அடங்காது; நாட்டில் அமைதியோ ஒழுங்கோ நிலவ முடியாது; பொது மக்கள் இந்நிலைமையை யுணர்ந்து சர்க்காரை வற்புறுத்த வேண்டும்.

இலட்சியம் அதிக தூரமில்லை

நாம் வசிக்கும் நாடு திராவிட நாடு. நாம் திராவிடர்கள். நமது இலட்சியம் திராவிட நாட்டைப் பெறுவது. இதில் திராவிட நாட்டு மக்கள் யாவருக்கும் எத்தகைய கருத்து வேற்றுமையுமில்லை.

திராவிட நாடு என்றால், இன்று திராவிடர் மனதில் ஒரு புது சக்தி உணர்ச்சி பிறக்கிறது. திராவிட நாட்டைச் சேர்ந்த ஆந்திரரும், கேரளரும், கன்னடியரும் தங்கள் தங்கள் கலை, மொழி, நாகரிகம் முதலியவைகளைக் காப்பாற்ற வேண்டுமென்றும், தாங்கள் சுதந்திரமாகத் தனித்து வாழ வேண்டுமென்றும் போராட முன்வந்து விட்டார்கள். கொச்சிமகாராஜா கொச்சி சட்ட சபையை ஆரம்பித்து வைக்கையில் மலபார், திருவிதாங்கூர், கொச்சி ஆகியவைகளைக் கொண்ட கேரள நாட்டை நிறுவ வேண்டுமென்றும் இதற்காகக் கேரள மக்கள் போராட வேண்டுமென்றும் பேசியுள்ளார். இது போல் ஆந்திரர்களும் தனி மாகாணம் நிறுவவேண்டுமென்றும் கிளர்ச்சி செய்து வருகின்றனர். கன்னடியர்கள் தனியரசு வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வருகின்றனர். இவர்கள் எல்லாம் தனித் தனியே பிரிந்து போய்விட்டால், எஞ்சியிருப்பவர்கள் தமிழர்கள்தான். தமிழர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தமிழ் நாடு தனி நாடாகப் பிரிந்தே தீரும்.

இன்று தனித்தனியாக சுதந்திரம் விரும்பும் இவர்கள் யாவரும் திராவிடம்-தமிழகம் என்ற மரத்திலிருந்து பிரிந்த கிளைகள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒருவனே தெய்வம், 'ஒன்றே குலம் என்று இருந்த திராவிட மக்களை ஆரியர்கள் தங்கள் பிரித்தாளும் சூழ்ச்சியினால் பல சாதிகளாகப் பிரித்து ஒருவரோடு ஒருவர் பற்றுதல் இல்லாமல் செய்து வைத்தது போல் தனித்தனி மொழிகளைத் தோற்றுவித்து, ஒன்றாக வாழ்ந்த தமிழ் மக்களைப்பிரித்து வைத்தார்கள். இதன் காரணமாக இன்று இவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றாலும், திராவிடர்கள் என்ற இன உணர்ச்சி இன்று இல்லையானாலும் என்றாவது பிறக்காமல் போகாது. ஏனெனில் வட நாட்டார், ஆரியர் நமமெல்லோரையும் சேர்த்தே சுரண்டி வருகிறார்கள். பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் ஏகபோகமாக ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இந் நாடுகள் இத்துறைகளில் முன்னேற வேண்டுமானால் தலையெடுக்க வேண்டுமானால், இவை ஒன்று சேர்ந்து வட நாட்டானை எதிர்த்தாக வேண்டும். இதற்கு வழி திராவிட நாட்டைக் காண்பது ஒன்றேயாகும் இதன் அவசியத்தை இன்று இல்லாவிட்டாலும் நாளை உணருவார்கள்என்பதில் ஐயமில்லை. எனவே, நாம் நமது இலட்சியத்தை நோக்கி முன்னேறுவோமேயானால், எதிர்பார்க்கிற காலத்திற்குமுன் நமது இலட்சியத்தை யடையலாம்.

இதற்காக, நாம் செய்யவேண்டுவது என்ன? திராவிட நாடு தனி நாடாகவேண்டியதின் அவசியத்தை விளக்கி மக்கள் உணரும்படி செய்ய வேண்டும். திராவிட மக்கள் மற்ற மக்களைவிட எவ்வளவு பின்னணியிலிருந்து வருகிறார்கள் என்பதையும் எவ்வளவுதூரம் இழிவுபடுத்தப்பட்டு வருகிறார்கள் என்பதையும் எடுத்துக்காட்ட வேண்டும்.

அரசியல் துறையிலும், மதத் துறையிலும், பொருளாதாரத்துறையிலும் யார் யாருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறோம் என்பதை விளக்கவேண்டும்.

தன் மானத்திற்காகப் பிறப்புரிமைக்காக மக்கள் கிளர்ச்சி செய்கிற போதெல்லாம், போராடும்போதெல்லாம், மதம் போச்சு, கடவுள் போச்சு என்று கூப்பாடு போடுவார்கள். பாமர மக்களை நம்மீது கிளப்பி விடுவார்கள்.

இதன் தொடர்ச்சி 6-ம் பக்கம்

கோழி கூவிற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன் ; பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று ! முளைய விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம் !

—புரட்சிக்கவி பாரதிதாசன்.

உதயம்

மலர் 1 4—8—46 இதழ் 1

நாம்

புத்தகங்கள், சஞ்சிகைகள், இதழ்கள், தாள்கள் முதலானவைகள் ஒருவரின் கருத்தை மற்றவர் தெரிந்து கொள்ளவும் இவர்களுக்குள் நல்லுணர்வேற்பட்டு நல்வாழ்வு வாழவும் உதவும் கருவிகள் என்றே கருதப்படவேண்டும். இதே நோக்குடன் தான் மேல் நாடுகளில் புத்தகங்கள், சஞ்சிகைகள், இதழ்கள், தாள்கள் வெளியாகிக் கொண்டு வருகின்றன. இதனால் தான், அவைகளில் புதுப்புதுக் கருத்துக்களையும் கொள்கைகளையும் காண முடிகிறது. மக்கள் அறிவு விளக்கம் பெற துணை புரியக்கூடியவைகளாக யிருக்கின்றன. இவ்வாறு இருப்பதால் அவைகள் இலட்சக் கணக்கில் பிரதிகள் வெளியிட வேண்டிய நிலையிலிருக்கின்றன.

ஆனால் இந்நாட்டின் நிலை அவ்வாறு இருக்கிறதாக எவரும் கருதுவதற்கில்லை. புத்தகங்கள் அதிகமில்லை. அதுவும் அறிவு விளக்கத்திற்கானபுத்தகங்களைக் காண்பதரிது பழைய உளுத்துப் போனக் கொள்கைகளை புது மெருகிட்டு எழுதப்பட்ட புத்தகங்களைத்தான் காண முடியும். அவைகளினால் மக்களின் அறிவு ஒரு சிறிதும் வளர முடியாது. இருக்கும் புத்தகங்கள் எல்லாம், இந்நாட்டு பெருங்குடி மக்களை இன்று இவ்வளவு இழிவான நிலையில் எந்த ஆரியம் ஆக்கிவைத்திருக்கிறதோ அந்த ஆரியத்தை ஆதரிக்கக்கூடியதாகவும்வளர்க்கக் கூடியதாகவும் இருக்கும். இப்புத்தகங்களே இவ்வாறு இருக்கும்போது இப் புத்தகங்களைப் படித்து அறிவு பெற்றவர்களால் நடத்தப்படும் சஞ்சிகைகளும், இதழ்களும், தாள்களும், எவ்வாறு இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. இவைகள் யாவும் ஆரியத்திற்கு நம் மக்களை அடிமைப்படுத்தி வாழையடி வாழையாய் அவர்களுக்குப் பாதைபூஜை பண்ணும்படிச் செய்து வருகின்றன. அவ்வாறு எழுதும் நூல்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் தான் இங்கு ஆதரவும் செல்வாக்குமிருந்து வருகின்றன. மற்றபடி நம் மக்கள் அறிவு பெறவேண்டும்; உலகில் மற்ற மக்களைப் போல் தன்மானத்துடன் வாழவேண்டும் என்று எழுதப்படும் நூல்களுக்கோ இதழ்களுக்கோ ஆதரவோ செல்வாக்கோ கிடைப்பதில்லை. எடுத்துக் கொள்ளுங்கள் இந் நாட்டில் ஆரியர்கள் 100க்கு 3 பேர்கள் திராவிடர்கள் 97 பேர்கள். ஆனால் இந்நாடிலுள்ள நூல்கள் இதழ்கள், தாள்கள் முதலானவைகளில் 100க்கு 99 ஆரியத்தை ஆதரிக்கக் கூடியவைகளாக இருப்பதையும், 100க்கு 1 அல்லது $\frac{1}{2}$ மக்களின் தன்மானத்திற்காகப் பாடுபடுபவைகளாக இருப்பதையும் காணலாம்.

இதற்கு என்ன காரணம்? இந்நாட்டில் ஆரியர்கள் படித்தவர்களாயும் மற்றவர்களை படிக்காதவர்களாயும் ஆன நிலைமை ஏற்படுத்திவைத்து விட்டார்கள். இதனால் எழுதப்பட்டுள்ள நூல்கள் எல்லாம் பெரும்பாலும் அவர்களாலும் அவர்களின் ஆதரவு பெற்றவர்களாலும் செய்யப்பட்டவைகளாய் விட்டன. இல்லாமல்போனால் நூல் வெளியாவதற்கே வழியில்லாமல் போய் விடுகிறது.

என்று மக்கள் கல்வி அறிவு பெற்று புதுப்புதுக் கருத்துக்களை ஆதரிக்க முன்வருகிறார்களோ அன்றுதான் புது நூல்களும் இதழ்களும் வெளிவர முடியும். எவ்வளவுக் கெவ்வளவு மக்களின் ஆதரவும் அன்பும் கிடைக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு இவைகள் பெருக முடியும். ஆனால் 100க்கு 97 பேர்கள் உள்ள சமுதாயத்தில் உள்ள நூல்களையும் இதழ்களையும் தாள்களையும் விரல்விட்டு எண்ணிவிடலாம். உண்மையிலே திராவிட முன்னேற்றத்திற்காகப் பாடுபடக் கூடிய இதழ்களில் 'விடுதலை' 'குடிஅரசு, 'திராவிடநாடு' திராவிடமணி' 'தொழிலாளர் மித்திரன்' போன்ற இரண்டொன்று தவிர வேறு எவை இருக்கின்றன? ஆரியத்தை பரப்பகூடிய இதழ்களுக்கு கணக்கு உண்டா? சஞ்சிகைகள், இதழ்கள் நாட் தாள்கள் எவ்வளவு? இவைகளில் ஒன்று போகிற அளவுச்குக் கூட நம் பத்திரிகைகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தால் கூட போகிறது என்று தைரியமாகக்கூற முடியாது. காரணமென்ன? ஆரியர்கள் அத்தனைபேரும் எவ்வளவு இதழ்கள் வந்தாலும் என்ன விலையானாலும் கொடுத்துவாங்குகிறார்கள் ஆதரிக்கிறார்கள் வாங்கச் செய்கிறார்கள். உதாரணமாக ஒரு வக்கீல் பார்ப்பனரை எடுத்துக்கொளுங்கள், ஏதாவது புதிதாக புத்தகமோ, இதழோ வெளிவந்தால் தம்கட்சிக்காரர் அவ்வளவு பேரையும் அதை வாங்கும்படிச் செய்கிறாரா இல்லையா என்பதைப் பாருங்கள். அதுபோல ஒவ்வொரு பார்ப்பனர் வேலைக்காரர்களும் செய்வதைக் காணலாம். ஆனால் நம்மவர்கள் இவ்வாறு நடந்து கொள்கிறார்களா? அவர்களிடம் இத்தகைய இன உணர்ச்சி இனபற்று இருக்கிறதா எண்ணிப்பாருங்கள். ஒருவர் ஒருபத்திரிகை வாங்கிவிட்டால்-ஒரு புத்தகத்தை வாங்கிவிட்டால், வேறு பத்திரிகையையோ புத்தகத்தையோ கண்ணெடுத்துக்கூடத் திரும்பிப் பார்க்கமாட்டார். தம் விஷயத்திலே இப்படி யிருப்பவர்க்ள் தம் கட்சிக்காரர்களையோ மற்றவர்களையோ வாங்கும்படிச் சொல்வாரா என்பதையும் எண்ணிப்பாருங்கள். இதனால்தான் நம் மக்களின் முன்னேற்றத்திற்காக வளர்ச்சிக்காகத் தோன்றிய பத்திரிகைகள்-இதழ்கள் பல மறைந்துப் போய் விட்டன. சில குற்றுயிராயிருக்கின்றன. ஏதோ ஒன்றிரண்டு நடத்தப்பட்டு வருகின்றன என்றால், அவரவர்களின் தனிப்பட்ட முயற்சியினால், பொறுப்பினால், கஷ்டநஷ்டத்துடன் நடத்தப்பட்டு வருகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

உதாரணமாக பெரியார் அவர்கள் 'விடுதலை' நாட் தாளை நடத்த நஷ்டஈடு கேட்டதொன்றே போதுமென்றே கருதுகின்றோம். இதிலிருந்து பத்திரிகை நடத்துவதென்றாலோ, புத்தகங்கள் வெளியிடுவதென்றாலோ பெரும் நஷ்டங்களுக்குள்ளாய்நடத்த வேண்டிவருகிறதுஎன்பதுவிளங்கும். ஆனால் இந்நிலைமை அதிக காலத்திற்கு நீடிக்காது என்ற நம்பிக்கை நமக்குண்டு. திராவிட மக்கள் ஓரளவுக்கு இன உணர்ச்சியடைந்து விட்டார்கள். ஆரிபத்தின் கொடுமையை தெரிந்து கொண்டு விட்டார்கள்; தன்மான உணச்சி பிறந்துவிட்டது. புதுப் புதுக் கருத்துக்களை அறிய ஆவலுள்ளவர்களாகயிருக்கிறார்கள். இதற்கான அறிகுறிகள் காணப் படுகின்றன. புலி என வாழ்ந்த நாம் இன்று எலி

6 AUG 1946

என வாழ்கிறோம் என்பதை யுணர்ந்து விட்டார்கள். இழந்த வீரத்தை தன்மானத்தை எந்த விலை கொடுத்தாயினும் அடைந்தே திருவோம்; இது நம் பிறப்புரிமை இதையாராலும் தடுக்க முடியாது என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள் அதனால், நமக்கு நம்பிக்கையுண்டு நம்மக்கள் ஆதரவு நமக்குக்கிடைக்குமென்று.இந்நம்பிக்கையின்மீதுதான் இப்பொழுது 'உதயம்' உதிக்கிறது.

உலகை சூழ்ந்துள்ள இருள் உதயத்தில் மறைவதுபோல் திராவிட நாட்டைக் கௌவ்விக் கொண்டுள்ள ஆரிய இருள் நமது 'உதய'த்தைக் கண்டதும் மறையும். திராவிட மக்களை ஆரிய மயக்கத்திலிருந்து விழித்திடச் செய்யும். தன்மானத்தோடு வாழச்செய்யும் கண்மூடிப் பழக்கங்களை மண்மூடிடச்செய்யும். ஒருவனை ஒருவர் இழிவுப் படுத்தும் கொடுமையை ஒழித்திடப் பாடுபடும்; உயர்ந்தவன் தாழ்ந்தவன் ஆண்டான் அடிமை தோட்டி தொண்டமான், முதலாளி தொழிலாளி என்ற வேற்றுமைகள் நீங்கஉழைக்கும். திராவிட நாட்டில் எல்லாமக்களும் இன்புற்று வாழத்துணை புரியும். திராவிட மக்கள் எந்நாட்டில் எங்கு இழிவுப் படுத்தப் பட்டாலும் அவர்களுக்காகப் பாடுபடும். குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், பாட்டாளிமக்கள், பெண்கள் ஆகியவர்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கும். மக்கள் விஞ்ஞான அறிவு பெற்று நல்வாழ்வு வாழ எல்லா வகையிலும் பாடுபடும். இந்நோக்கத்திற்கு எதிராக உள்ள தடைகள் எதுவாயினும் அதனை திரத்துடன் எதிர்த்துதகர்த் தெறியும். இது உறுதி! உறுதி!! உறுதி!!!

உதயம்

வருடச்சந்தா ரூ. 5—0—0

6 மாதச் சந்தா ரூ. 2—8—0

தனிப்பிரதி விலை 0—1—3

மானேஜர்,
"உதயம்"
திருவத்திபுரம். N. A.

உதய மலர்ந்து;
உலகமகிழ்ந்தது!

திருவத்திபுரம். வித்துவான். மாவண்ணு. தேவராசன்.

'சங்கொலிக்கின்றது' என்ற பாட்டைப் போல் பாடுக

பண்: பூபாளம் **தாளம்: நபகம்.**

உதயமலர்ந்தது; உலகமகிழ்ந்தது!
உறக்கத்தை விட்டெழு; திராவிடனே!—இன
உணர்ச்சி கொண்டுழைக்க, வாராய்; உடனே!

இதய மலர்விக்கும் இரவி யுதித்தனன்;
இனி உறக்கம் விடு; திராவிடனே!—இனம்
ஏற்றமுறச் செய்வ(து) உன்கடனே!

சமுதாய ஊழலாம் தனிக்கருமேகங்கள்
தகர்ந்தன; விழித்துப்பார்! திராவிடனே!—உரிமைத்
தாரை மலரக்கண்பார் இடனே!

ஆரியக் காரிருள் அகன்றது; தமிழர(சு)
அருணன் உதயம் காண்; திராவிடனே!—புவி
அனைத்தையும் ஆள்வது நம் கடனே!

பொருளாதாரக்குறை எனும் பனி போயிற்று!
புலர்ந்த(து) உதயக் கதிர், கிழக்கே!—இனி
போக்கிட வா; சமயச் சழக்கே!

பிறர்மொழி யாம் விண்வீழ்க் கொள்ளிகள் பேர்ந்தன!
பெருந்தமிழ் உதயம் காண்; திராவிடனே!—தமிழ்ப்
பேணி வளர்த்திடல் நம் கடனே!

"இரவினல்* வாழ்வது" எனும் இர(வு)† ஒழிந்தது;
‡இரவி உதயம் கண்டெழு புவிமேல்!—பொருள்
எல்லார்க்கும் உண்(டு); ஒளி போல் இனிமேல்!

"நாளைக்(கு) உணவெங்கே நாடுவேன்?" என்றினி
நலிவதை விட்டுழை ஞாலத்தின்மேல்—உதயம்
நல்கும் உன் நலன் எதிர்காலத்துமே!

"சமதர்மப் பேரொளி தான்புவி மாந்திடத்
தவறுமல் வா; உதயக் கதிரே!"—என்று
தான் மகிழ்ந்து கொள்; "உதயம்" எதிரே!

உலகிற்(கு) உணர்வை உதவிடும் உதயம் போல்
உணர்(வு) அளித்தே வாழ்க தமிழ் உதயம்!—நலம்
உற்றினி மகிழ ஏழை இதயம்!

குறிப்பு:—*இரவு=பிச்சை. †இரவு=இராத்திரி. ‡இரவி=சூரியன்.

தாழ்த்தப்பட்டோர் "சத்தியாக்கிரகம்"

இந்த இருபதாம் நூற்றாண்டில், உலக மக்கள் யாவரும் சரி நிகர் சமமாக வாழவேண்டும்; எல்லோருக்கும் சம உரிமை வேண்டும் என்று கொக்கரிக்கும் இந்நாளில், ஒருவனை ஒருவன் தொடக் கூடாது, பார்க்கக் கூடாது தெரு வழியே நடக்கக்கூடாது, பொது விடங்களிலும் நுழையக் கூடாது, என்ற நிலையில் 8 கோடி மக்கள் இந் நாட்டில் வைக்கப்பட்டிருக்கிறார்களென்றால், இந்தியாவுக்கு எவ்வளவு பெருமை! இவ்வளவு இழிவாகக் கருதப்படுகிற நடத்தப்படுகிற ஒரு சமுகம் உலகில் எந்த நாட்டிலும் காண முடியாது என்று தைரியமாகச் சொல்லலாம். தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று இந்நாட்டில் இவ்வளவு இழிவான நிலையில் இல்லையென்று எவரும் சொல்ல முடியாது. ஏதோ இரண்டொருவர் சமமாக மதிக்கப்படுவதாகக்கூறலாமென்றாலும் பொதுவாக அச் சமுக மக்கள் நிலை மிக மிக இழிவானதாகவேயிருந்து வருகிறது. உண்மையிலே, மனித ரத்தம் உடலில் ஓடும் எவரும் இதைச் சகித்துக்கொண்டிருக்க முடியாது.

தாழ்த்தப்பட்ட மக்களின் ஒப்பற்றத் தலைவர் டாக்டர் அம்பேத்கார் இதை அன்றே உணர்ந்துதான் இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் முஸ்லிம் லீக்குடன் சேர்ந்து கொண்டு தங்களுக்கும் தனித்தொகுதி வழங்கவேண்டும் என்று கோரினார். இதைக் காந்தியார் எதிர்த்தார். தீண்டாமையை ஒழிக்க தம் உயிரையே அர்ப்பணம் செய்வதாகக்கூறி அதற்காக உயிரைவிடப்போவதாக பட்டினிக் கிடந்தார். காங்கரஸ் தீண்டாமையைப்போக்கும் என்ற நம்பிக்கையின் மீது டாக்டர் அம்பேத்கார் தமது கோரிக்கையை விட்டுக்கொடுத்தார். கூட்டுத் தொகுதியை ஏற்றுக்கொண்டார். ஆனால் காங்கரசினால், தீண்டாமை யொழியவில்லை; சமத்துவ மடைய வழியில்லை; இழிவு நீக்கப்பட வில்லை கூட்டுத் தொகுதி முறையிருப்பதனால், பிரைமரி தேர்தலில் சுயமரியாதை யுணர்ச்சி யுடையவர்கள் வெற்றி பெற்றாலும், சாதி இந்துக்கள் என்பவர்களுடன் சேர்ந்து நடத்தும் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு விடுகிறார்கள். ஆதலால் இம் முறை யொழிந்தாகவேண்டும் என்று டாக்டர் அம்பேத்கார் காங்கரசை எதிர்த்து கிளர்ச்சி நடத்திவருகிறார்.

அடுத்தபடியாக பிரிட்டிஷார் பாதுகாப்பு தருவதாக வாக்களித்து வந்தார்கள்; மைனாரிட்டிகளைக் கைவிட மாட்டோம் என்று கூறிவந்தார்கள். ஆனால் பிரிட்டிஷ் மந்திரிகளின் தூது கோஷ்டியினர் வெளியிட்ட திட்டத்தில் இவர்களுக்குப் பாதுகாப்பில்லை. எனவே பிரிட்டிஷ் சர்க்காரை எதிர்த்தும் கிளர்ச்சி துவக்க வேண்டியதாயிற்று.

தங்கள் எதிர்ப்பைப் பூனாவில் சட்டசபை மண்டபத்திற்கு முன் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தடுக்கப்பட்டது. தடையுத்தரவை மீறுவது என்று முடிவுசெய்து இதுவரை 1000க்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் காங்கரஸ் சர்க்காரால் கைதுசெய்யப்பட்டுதண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இதைச்சத்தியாக்கிரகம் என்று காங்கரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். எந்த உரிமைக்காக காங்கரஸ் பாடுபடுவதாகச் சொல்லப்பட்டதோ எந்த உரிமையைப் பெற தடியடிபட்டு சிறை சென்றதாக சொல்லி வந்தார்களோ அதே உரிமையைக் கோரும் தாழ்த்தப்பட்ட மக்கள் சிறையில் தள்ளப் படுகிறார்கள். இதிலிருந்தாவது காங்கரசாரின் உரிமைப்போரின் இலட்சணம் என்ன என்பதை மக்கள் உணர்வார்களாக.

தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்ப்பைக் காட்டினால் மட்டும் போதாது தங்கள் உரிமையைப் பெறுவதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் துணிவு கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இழந்த உரிமையைப் பெற முடியும். தன்மானமற்று விலங்கினும்கேடாய் உழல்வதைவிட ஒரு சிலர் பலியாவதனால் என்ன குடி முழுகிப்போய்விடும்? உலகில் எந்த நாடு எந்தச்சமுகம் ஒரு சிலரை பலியிடாமல் உரிமையைப் பெற்றிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கட்டும் தாழ்த்தப்பட்டத் தோழர்கள். தாழ்த்தப்பட்டோரும் திராவிடரும் முஸ்லிம் லீக்கும் இன்று ஒன்று சேர்ந்து போரைத் துவக்கினால்,பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் முறியடிக்கப் படுவதோடு காங்கரசின் ஆணவமும் அழிக்கப்படும். எண்ணிப்பார்க்கட்டும் தோழர்கள்.

சர். A. இராமசாமி முதலியார்

சர். A. இராமசாமி முதலியார் அவர்கள் மைசூர் திவானாக நியமிக்கப்பட்டிருப்பதாக மைசூர் சர்க்கார் வெளியிட்டுள்ள கெஜட்டிலிருந்து தெரியவருகிறது. அவர் ஆகஸ்ட் 7-ம் தேதி தமது புதிய பதவியை யேற்றுக்கொள்வார்.

உங்களுக்குத் தெரியுமா?

அமெரிக்க ஐக்கிய நாட்டில் 48 தனித்தனி சுயேச்சை நாடுகள் இருக்கின்றன 48 நாடுகளுக்கும் சொந்த சர்க்கார் இருக்கிறது; தனிச்சட்டங்கள், சொந்தக்கோர்ட்டுகள் தனிக்கல்விஸ்தாபனங்கள், போக்கு வரவுசாதனங்கள்,இருந்துவருகின்றன. வரிவிதிப்பும் தனி. ஆக 48நாடுகளிலும் சுயேச்சை சர்க்கார்களே இயங்கிக் கொண்டுவருகின்றன. இவைகள் எல்லாம் சேர்ந்து ஒரு சமஷ்டியாக அமைந்து பொது விவகாரங்களைக் கவனித்து வருகின்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கொடியில் காணப்படும் 48 நட்சத்திரங்கள் 48 தனித் தனி நாடுகளையே குறிப்பதாகும்.ஆனால் அக்கொடியில்காணப்படும் சிகப்பு வெள்ளைக் கோடுகள் 1776ல் ஐக்கியமான 13 குடியேற்ற நாடுகளைக்குறிப்பிடுவதாகும். கொடியில் காணப்படும் இரண்டு நட்சத்திரங்கள் 1912ல் ஐக்கிய நாடுகளுடன் சேர்ந்த நியூ மெக்ஸிகோ, அரிஸோனா ஆகிய இரு நாடுகளையும் குறிப்பதாகும்.

வ. ஆ. ஜில்லாவில் கட்டாயக் கல்வி

வட ஆற்காடு ஜில்லா போர்டார் கீழ்க்கண்ட கிராமங்களில் கட்டாயக் கல்வியைப் புகுத்துவது என்று போட்ட திட்டத்தைச் சென்னை சர்க்கார் அங்கீகரித்திருப்பதாகத் தெரிகிறது.

கிராமங்கள் வருமாறு: செமிலி, குருராஜ பேட்டைஅதைச்சேர்ந்த செம்பேடு, மேல் களத்தூர், தேவிகாபுரம், நெடுங்குப்பம், செங்கம், புதுப்பாளையம், தண்டராம்பேட்டை, கொட்டகுளம், கரியமங்கலம், நாராயணகுப்பம், பெருங்கட்டூர், மேல்னலூர், களம்பூர்,ஆலங்காயம்,அம்பலூர், ஜோலார்பேட்டை கந்திலி, தெங்கால் இன்னும் சில கிராமங்கள்.

3ம் பக்கத் தொடர்ச்சி

ஒருவனை ஒருவன் சுரண்டுவதற்கும் ஒருவனை ஒருவன் இழிவுபடுத்துவதற்கும் ஆக மதமோ கடவுளோ இருக்குமேயானால், அவைகளை அழிப்பதில் எவ்வித தடையோ எதிர்ப்போ இருக்கமுடியாது. எனவே,இத்தகையப் பூச்சாண்டிகளுக்கு திராவிடர் பயப்படவேண்டியதில்லை. நியாயத்திற்கு என்றும் பயப்படவேண்டிய தில்லை. உண்மையிலே கடவுள் என்பவர் ஒருவர் இருப்பாரேயானால், அவர் நம்பக்கத்தில்தான் இருப்பார். ஆகவே, அஞ்சாமல் நம்பாதையிலே சென்றால் வெற்றியடைவோம். இப்பொழுது நாடு நல்ல பக்குவமடைந் திருக்கிறது. திராவிடர் முரசு கொட்டினால், போராட்டத்திற்கு-உரிமைப் போராட்டத்திற்கு மக்கட் படை, திரண்டெழும். உறுதி!

8 AUG 1946

ஜனப் ஜின்னவின் "பாம்"

கடந்த 2, 3 மாதங்களாக இந்திய அரசியல் உலகத்தில் ஒரே கொந்தளிப்பு. பிரிட்டிஷ் மந்திரி சபையின் தூது கோஷ்டியினர் வந்தனர்; தங்கள் நிலையாருடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் பந்தோபஸ்தாயிருக்குமோ அவர்களிடம் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் (?) அதாவது அவர்களுக்கு விட்டுக்கொடுத்து தங்கள் வாக்குறுதிகளையும் கடமைகளையும் மறந்து நன்றியோ விசுவாசமோ யில்லாமல் நடந்து கொண்டார்கள்.

ஆனல் அவர்கள் எண்ணத்தில் மண் விழுந்து விட்டது. முஸ்லிம் லீக் தலைவர் காயிதே அஃஜம் ஜனப் ஜின்ன அவர்கள் போட்ட "பாம்" அவர்கள் மனக்கோட்டையை தூளாக்கி விட்டது.

பிரிட்டிஷாரிடம் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டு இந்நாட்டிலுள்ள 6கோடி தீண்டப்படாத மக்களையும் 10 கோடி முஸ்லீம்களையும் தங்களின் ஏகாதிபத்தியத்தின் கீழ்கொண்டுவந்து அடக்கியாளலாம் என்று மனப்பால் குடித்து வந்தனர் காங்கிரசார். இந்த எண்ணத்தின் மீதுதான் அரசியல் நிர்ணய சபையை ஏற்றுக் கொண்டனர். இதை உடைத்தெறிந்தார் ஜனப் ஜின்ன அவர்கள்.

சட்டத்திற்குட்பட்டு அரசாங்கத்திற்கு அடங்கி என்ன செய்தாலும் எத்தகைய நடவடிக்கை யெடுத்தாலும் மக்கள் சுதந்திரமடைய முடியாது என்பதை விளக்கி விட்டது இவ்வாரம் பம்பாயில் கூடிய முஸ்லிம் லீக் கௌன்சில் கூட்டம்.

பிரிட்டிஷ் சர்க்காரையும் காங்கரசையும் எதிர்த்து நேரடியான போராட்டத்தில் இறங்கி தங்களது சுதந்திரத்தை பெற்றே தீருவது என இந்திய முஸ்லிம்கள் முடிவு செய்து விட்டனர்.

பிரிட்டிஷ் சர்க்கார் அளித்த பட்டங்களைத் துறக்க வேண்டுமென்று லீக் கௌன்சில் தீர்மானித்த அதே விநாடியில் அங்கு கூடியிருந்த பலர் மேடை மீது ஏறி தங்கள் பட்டங்களைத் துறந்து விட்டாதாக அறிவித்தார்கள். நூற்றுக்கணக்கானபேர் பட்டங்களை விட்டு விட்டதாக தந்திகள் கொடுத்த வண்ணமிருக்கின்றனர்.

ஜனப்ஜின்ன அவர்கள் போட்ட "பாம்" காங்கரஸ் வட்டாரத்திலும் பிரிட்டிஷ் சர்க்கார் வ்ட்டாரத்திலும் பெரிய கலகத்தையுண்டு பண்ணியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

நாட்டிலே எங்கு பார்த்தாலும் ஆட்சியினர் மீது வெறுப்பும் ஆத்திரமும் அதிகரித்து வருகிறது. தொழிலாளர்கள், சர்க்கார் ஊழியர்கள் எல்லாம் அதிருப்தியாகயிருக்கிறார்கள். எங்குபார்த்தாலும் வேலை நிறுத்தம்.

இதுமட்டுமல்ல பஞ்சம், பஞ்சம் என்ற கூக்குரல்; உண்ண உணவில்லை, உடுத்த உடையில்லை. எதாவது கிடைத்தாலும் விலையோ சகிக்க முடியாத அளவுக்கு உயர்ந்து விட்டது. இதனல் சாதாரண மக்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள்.

இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் ஜனப் ஜின்னவின் "பாம்" வெடித்திருக்கிறது. இதன் விளைவு என்ன என்பது இப்பொழுது கணக்கிடமுடியாது. இடிப்பாடுகளை புரட்டிபார்த்த பின்தான் தெரிய வரும். பொறுத்திருந்து பார்ப்போம்.

ஆகஸ்ட் 16ந் தேதி நாடெங்கும் போர் முழக்கம் முழக்கும்.

குன்றுத தமிழர் பண்பு

முன்னளில் மன்னர்கள் மக்களை ஆண்டு வந்தார்கள். இன்று அந்நிலை மாறிவிட்டது. மக்களாய் பிறந்த ஆண் பெண் ஒவ்வொருவரும் மன்னர்கள். தங்களைத் தானே ஆண்டு கொள்கிறார்கள். ஆளுகிறவர்களும் அவர்களே ஆளப்படுகிறவர்களும் அவர்களே. இதை இந்நாட்டில் தமிழ் மக்கள் நன்குணர்ந்து விட்டார்கள்.

சென்ற 28-7-46 ஞாயிறு மாலை சென்னை பச்சையப்பன் மைதானத்தில் வெள்ளம்போல் திரண்டிருந்த மக்கட் கடலைக் கண்டவர்கள் இவ்வுண்மையை நேரில் கண்டிருப்பார்கள்.

நாட்டுக்கு நற்பணி ஆற்றுபவர்களை மன்னர்கள் ஆதரித்து கௌரவப்படுத்தி வந்தார்கள். புலவர்களை போற்றி ஆதரித்து வந்தார்கள். அந்தப்பணியை தமிழ் மக்கள் இன்று மேற்கொண்டு விட்டார்கள்.

சென்ற ஞாயிறன்று சென்னையில் தமிழ் மக்கள் தங்களின் அன்புக்குரிய உயிர்க்கவி புரட்சிக்கவி பாரதிதாசன் என்கிற கனகசுப்பரத்தினம் அவர்களுக்கு பொற்கிழி தந்து பொற்றுடை போத்தி புகழ் மாலை சூட்டி பூரிப்படைந்தனர்.

சாதி, சமயச் சண்டைகளில் சிக்கி, மூட பழக்க வழக்கங்களில் மூழ்கி தன் மானமற்று சுரணையற்றுக் கிடந்த மக்களை தட்டி யெழுப்பி புத்துயிரளித்து புரட்சிக் கனலைக்கொட்டி சுதந்திரத்தீயை மூட்டிய ஒருவருக்கு அன்று அளித்த பணமுடிப்புரூ. 24399 போதுமான தென்றோ பொற்றுடையும் புகழ்மாலையும் சரியான தென்றோநாம்கருதவில்லை அவர்செய்துள்ள பணிக்குதமிழ் மக்கள் தம்செல்வமனைத்தும் கொடுத்துதவினலும் தகும் எனவே அன்றுடன் தங்கள் கடன் தீர்ந்து விட்டதென்று நின்று விடாமல் இவரையும் இவர் போன்ற கவிகளையும் என்றும் ஆதரித்து தமிழரின் பண்பை காப்பாற்றுவார்களாக.

செங்கற்பட்டு மாவட்ட திராவிடர் மாநாடு

காஞ்சிபுரத்தில் சென்ற மாதம் 13, 14 தேதிகளில் பழய கோட்டை இளைய பட்டக்காரர் தோழர். N அர்ச்சுனன், அவர்கள் தலைமையில் நடைபெற்றது.. 10,000 மக்கள் உட்காரக் கூடிய அளவில் பெரும் பந்தல் "பெரியார் பந்தல்" என்ற பெயரால் போடப்பட்டிருந்தது. ஆண்களும், பெண்களுமாக 5000ம் பேர்களுக்குமேல் வந்திருந்தனர். இரண்டுநாள் இரவும் தமிழர் தளபதி சி. என். அண்ணதுரை அவர்களும் மற்றத் தோழர்களும் "சிவாஜிகண்ட இந்து இராஜ்ஜியம்" என்ற சரித்திர நாடகத்தையும், "சந்திரோதயம்" என்ற சமூக சீர்திருத்த நாடகத்தையும் திறமையுடன் நடித்துக் காட்டினர். 10,000 மக்களுக்கு மேல் கண்டு களித்தனர். ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் கண்டு களித்தது குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞானம் எதற்கு?

விஞ்ஞானம் மக்களின் வாழ்வை உயர்த்தப்பயன் படவேண்டும்; மக்களின் துயரைப் போக்க உதவ வேண்டும்; மக்களின் இன்பத்தைப் பெருக்க துணைபுரிய வேண்டும். ஆனல் உலகில் இன்று அந்த வகையில் பயன் படவில்லை. மக்களை அழிக்க பயன் படுகிறது. மக்களுக்கு துன்பத்தை விளைவிக்கிறது. இதற்கு காரணம் எ[illegible] விஞ்ஞானத்தை பயன் படுத்துகிற கூட்டத்தின் சுய நலமே காரணம். அக்கூட்டம் தன்னுடைய நலனுக்குப் பயன்பட உபயோகிப்பதால் இந்தக் கேடு விளைகிறது. ஆனல் ரஷ்யாபோன்ற நாடுகளில் விஞ்ஞானம் மக்களின் வாழ்க்கையை எவ்வளவோதூரம் முன்னேற்றமடையச் செய்கிறது.

உதாரணமாக சூரியனது ஒளியினல் பொது மக்கள் குளிக்கும் இடங்களில் தண்ணீரை சூடுபடுத்துவதற்கு பயன்படுத்துகிறார்கள். ஜியார்ஜியா மாகாணத்தின் தலைநகரான டிபிலிசிக்கு அருகில் இதைச் செய்துவருகிறார்கள். குளிக்கு மறைகளுக்கு மேல் கூரைகளில் அலுமினியத் தாள்களைத் தாவிய கருவி யொன்றை நிறுவியுள்ளார்கள். இது சூரியனது ஒளியை தன்னுள் வாங்கி கீழே உள்ள நீரை சூடாக்குகிறது. பிறகு இந்த சுடுநீரை குழாய்கள் மூலமாக அந்தந்த அறைகளுக்கு அனுப்புகிறார்கள். இதுபோல், அங்கு விஞ்ஞானம் மக்களின் தேவையைப் பூர்த்திபண்ண உபயோகிக்கப்படுகிறது.

தன்மானத் தாலாட்டு	விலை 0 2 6

புரட்சிக்கவி பாரதிதாசன்,
திருவத்திபுரம் மாவண்ண தேவராசன் இயற்றியது.

பார்ப்பனப் படுமோச விளக்கம்	விலை 0 3 0
புரட்சிக்கவி தந்த புதையல்	விலை 0 4 0

திருவத்திபுரம், மாவண்ண தேவராசன் இயற்றியது.
தனிப்பிரதி வேண்டுவோர் (புத்தக விலையுடன்) 9பை தபால் தலை அனுப்புக
விவரங்கட்கு:—ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம், திருவத்திபுரம், வ.ஆ.

தலைமை வகித்து நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். தோழர் பாரதியார் அவர்கள் தமது தலைமையுரையில் கவிகளைப் பாராட்ட வேண்டியதின் அவசியத்தை விளக்கிவிட்டு இத்தகைய கூட்டத்தைத் தாம் என்றும் எங்கும் கண்டதில்லை யென்றும், இதுவொன்றே போதும் தமிழ்மொழிப் பற்று எவ்வளவுதூரம் மக்களிடம் வேரூன்றியிருக்கிறது என்பதை விளக்குவதற்கு என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்மக்களால் அளிக்கப்பட்ட அன்பளிப்பை ரூ 24,399ஐ தமிழர் தளபதி தோழர் C N அண்ணாதுரை M.A., அவர்கள் பெருங்கைத் தட்டுதலுக்கிடையே உயிர்க்கவி பாரதிதாசன் அவர்களிடம் வழங்கினார்.

காஞ்சிபுரம் தோழர் A. K. தங்கவேலர் அவர்கள் பொன்னாடையை தமது அன்பளிப்பாக அளித்தார் கவிஞர் அவர்களுக்கு. பிறகு 80க்கு மேற்பட்ட சழகங்களின் சார்பில் வாழ்த்து இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. எண்ணற்றமாலைகள் அணிவிக்கப்பட்டன.

பிறகு கவிஞர் அவர்களைப் பாராட்டி அவரது கவியினால் மக்களடைந்த விழிப்பையும் உணர்ச்சியையும் விளக்கி தோழர்கள் சென்னை மேயர் திவான்பகதூர் N. சிவராஜ், P. ஜீவானந்தம், வித்துவான் வேணுகோபால், K. A. P. விசுவநாதன், செங்கல்வராயன், R. P. சேதுப்பிள்ளை, டாக்டர் கிருஷ்ணசாமி சிவஞான கிராமணியார், நெடுஞ்செழியன், ராவ்சாகிப் சம்பந்த முதலியார், குஞ்சிதம், குருசாமி முதலியவர்கள் பேசினார்கள். இடையே நமசிவாயம் அவர்களின் இன்னிசை விருந்தது நடந்தது.

தமக்களித்த அன்பளிப்புக்கும் பாராட்டுரைகளுக்கும் கவி அவர்கள் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது மக்களுக்கு முதலில் தைரியம் வேண்டும், தானாக எதையும் சிந்தித்துப் பார்த்து தனக்குச் சரி என்று பட்டதை செய்யும் துணிச்சல்வேண்டும்

முப்பது வருடங்களுக்கு முன் மக்கள் மனோநிலை இருந்து வந்ததையும் இன்று இருந்து வருவதையும் எண்ணிப்பாருங்கள். அன்று மதத்தையோ வைதிகத்தையோ கண்டிப்பதென்றால் எவ்வளவு எதிர்ப்பு? எவ்வளவு கண்டனம்?

எவன் ஒருவன் தைரியமாக நினைக்கவும் அதைச் செய்யவும் துணிவு கொள்ளுகிறானோ அவனாலே தான் வாழ்க்கையில் வெற்றி காண முடியும்.

ஒருவன் தனக்கு எது சரியெனப் படுகிறதோ அதை தைரியமாக செய்துகொண்டே வரவேண்டும். எவரது விருப்பு வெறுப்பையும் குறித்து இலட்சியம் செய்யலாகாது அவ்வாறு செய்வானேயானால் அவன் இறுதியில் வெற்றி காண்பான் என்பதில் ஒரு சிறிதும் சந்தேகங்கொள்ளவேண்டியதில்லை.

வெறும் மொழிப்பற்று மட்டும் ஒருவன் கொண்டிருந்தால் பயனில்லை. நல்ல தமிழிலே எழுதிவிட்டதினால் மக்களுக்குப் பெரிய சேவை செய்ததாக ஆகிவிடமுடியாது. புதுப் புதுக் கருத்துக்களைக் கொண்டதாக இருக்கவேண்டும் மக்கள் மனோநிலையை உணரவேண்டும். வேறு மொழியில் உள்ள இலக்கியங்களைக் கற்கவேண்டும். அவைகளிலுள்ள கருத்துக்களை அறிய வேண்டும்.

ஒரு காலத்தில் கவியென அழைக்கப்பட வேண்டுமானால், அக்கவியில் தொல்காப்பியத்திலிருந்து மேற்கோள்கள் இருக்கின்றனவா பழய இலக்கியங்களிலிருந்து உதாரணங்கள் விளக்கப் பட்டிருக்கின்றனவா என்று பார்ப்பார்கள். ஆனால் இன்று அந்நிலை மாறிவிட்டது. புத்தம் புதுக் கருத்துக்கள் இருக்கின்றனவா? மக்கள் மனத்திலே புது மலர்ச்சியை ஊட்டுகின்றதா என்ற தராசு கொண்டுதான் இன்று அளந்து பார்க்கப்படுகிறது.

இந்தச் சமயத்தில், நம் நாட்டின் சமுதாய நிலையைப்பற்றி சிறிதாவது குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை தமிழ் நாட்டில் சமுதாயம் அமைக்கப் பட்டிருப்பதுபோன்ற நிலையை உலகில் வேறு எங்கும் காண முடியாது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தார் எல்லா போக பாக்கியங்களையும் அனுபவிக்கிறார்கள். ஆனால் அவர்கள் மக்களுக்கு செய்கிற காரியம் என்ன? காட்டும் நன்றி என்ன? மற்றவர்களை அடிமைப் படுத்தி இழிவு படுத்தி வைத்திருப்பது ஒன்றுதான்.

இன்று தமிழன் வாழ்வு எவ்வளவு பரிதாபகரமானதாக இருக்கிறது என்பதைப் பாருங்கள். பொருளாதாரத் துறையில் வர்த்தகத் துறையில் வட நாட்டான்-மார்வாடி குஜராத்திகளின் ஆதிகத்திலிருந்து வருகிறான். அவனது சுரண்டலுக்கு ஆளாகிவருகிறான். வட நாட்டு முதலாளிகள் கையில் இன்றுள்ள வர்த்தகம் தொழில்கள் எல்லாம் சிக்கிக்கிடக்கின்றன.

அரசியல் துறையில் வடநாட்டான் சர்வாதிகாரம் தான் இன்று இருந்து வருகிறது.

மதத்துறையில் தமிழன் தனது நெஞ்சை ஒரு சுயநலக்கூட்டத்தினிடம் அடகுவைத்து விட்டான். மதத்தின் பெயரால் இன்றுள்ள சாதிக் கொடுமைகள் இழிதன்மைகள் ஒழிக்கப்பட்டாக வேண்டும். மறுபிறப்பு மோட்சம் என்ற பித்தலாட்டங்களைத் தகர்த்தெறிய வேண்டும். கவி என்பவனும் மக்களில் ஒருவன். இத்தகைய கொடுமைகளை அவன் எப்படி பார்த்து சகித்துக் கொண்டிருக்க முடியும்? சாதிவேற்றுமைகளையும் மூடச் சடங்குகளையும் உடைத்தெறியவேண்டும். சுதந்திர எண்ணம் ஒவ்வொருவரிடமும் தோன்றவேண்டும்; சுதந்திரஉணர்ச்சி பிறக்கவேண்டும். இதற்கு கவிகள் கருவிகளாக இருக்க வேண்டும். ஆரம்பத்தில் சிறிது கடினமானகாரியமாகத் தோன்றலாம். பின்னால் அதைப்போன்று இன்பம் அளிக்கக்கூடிய காரியம் எதுவும் இருக்க முடியாது. எனவே, தோழர்களே, குறிப்பாக வாலிபர்களே! உங்கள் மனதில் சரியென்று பட்டதைச் செய்ய துணிவு கொள்ளுங்கள், எதற்கும் அஞ்சாதீர்கள் வெற்றி யடைவீர்கள் என்று பேசி விட்டு தமக்களித்த அன்பளிப்புக்கு நன்றி செலுத்திவிட்டு; தம்மைப் பாராட்டிப் பேசியயாவருக்கும் நன்றி செலுத்தினார்.

தோழர் C.N. அண்ணாதுரையவர்களின் நன்றிகூறலுடன் வைபவம் 11 மணிக்கு இனிது முடிந்தது.

இவ்விழாவிற்கு சென்னைமாகாணத்தின் எல்லா பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்திருந்தனர். தமிழ் ஜில்லாக்களிலிருந்து நூற்றுக்கணக்கான பேர்கள் ஒரு நாளைக்கு முன்னதாகவே வந்து காத்திருந்தார்கள்.

இவ்விழா இவ்வளவு வெற்றிகரமாக முடிந்ததற்கு எல்லாக் கட்சி பிரமுகர்களின் ஒத்துழைப்பும் பொது மக்களின் ஆதரவும் என்றபோதிலும் தோழர்கள் C. N. அண்ணாத்துரை T. N. ராமன், J. P. கண்ணன், கிருஷ்ணராஜ் ரெட்டியார், N. V. நடராஜன் முதலியவர்களின் இடைவிடா உழைப்பும், "திராவிட நாடு" "லிபரேட்டர்" ஆகிய பத்திரிகைகளின் பிரச்சாரமும் என்பதை யாராலும் மறக்கமுடியாது. நமது கவி தமது உரையில், தோழர்கள் C. N. அண்ணாத்துரை அவர்களும் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சியைப் பாராட்டிய தொன்றே போதும்.

Edited, Published by M. Kandaswamy, Tiruvettipuram (N. A.) and Printed at the Sri Lakshmi Press at Tiruvettipuram by M. Vedapuri Mudaliar.